TNPSC Tamil Current Affairs 18th April 2017

1). 2017 ஆம் ஆண்டிற்க்கான Dr.Paduru Gururaja Bhat நினைவு விருதினைப் பெற்றவர் யார்?

A).A V Narasimha Murthy.

B).N Jayaram.

C).B K Chandrasekar.

D).P Sripathy Tantry.

விடை : A). A V Narasimha Murthy.

சிறந்த வரலாற்றாசிரியர் மற்றும் தொல்லியல் ஆய்வாளரான பேராசிரியர் திரு. ஏ.வி. நரசிம்மமூர்த்தி அவர்களுக்கு, தொல்லியல், பண்டைய வரலாறு, நாணயவியல் போன்ற துறைகளில் பங்களிப்பிற்காக 2017 ஆம் ஆண்டிற்கான Dr.Paduru Gururaja Bhat நினைவு விருது, கர்நாடக மாநிலத்தில் உள்ல உடுப்பியில் வழங்கப்பட்டது. Dr.Paduru Gururaja Bhat நினைவு விருதில் சான்றிதல் மற்றும் ரூபாய் 50,000 வழங்கப்படும். இவர் பாரதிய வித்யா பவனின் தலைவராக மற்றும் அல்லாது மைசூர் பழ்கலைக்கழகத்தின் பண்டைய தொல்லியல் மற்றும் தொல்லியல் பிரிவின் தலைவராகவும் விளங்கினார். 2010 ஆம் ஆண்டு முதல் Dr.Paduru Gururaja Bhat நினைவு விருது, அரசியல், தொல்லியல் மற்றும் சமூகவியல் துறையில் சிறந்த பங்களிப்பிற்காக வழங்கப்படுகிறது. மறைந்த Paduru Gururaja Bhat (1924-1978) ஒரு சிறந்த ஆசிரியர், வரலாற்றாசிரியர் மற்றும் துளுவ மொழியின் வரலாற்றின் சிறந்த ஆராய்ச்சியாளர்.

2). 2017 ஆம் ஆண்டிற்கான உலக பாரம்பரிய தினத்தின்(World Heritage Day) நோக்கம் என்ன?

A). World Heritage for Tourism.

B).Cultural Heritage and Sustainable Tourism.

C).The Heritage of Sport.

D).Cultural Heritage For Tourism.

விடை : B). Cultural Heritage and Sustainable Tourism.

உலக பாரம்பரிய தளங்களாக அறிவிக்கப்பட்ட தளங்களை பாதுகாத்தல் மற்றும் பராமரிப்பதற்கான விழிப்புணர்வைப் பரப்புவதற்க்காக உலக பாரம்பரிய தினம்(World Heritage Day) அனுசரிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டிற்கான உலக பாரம்பரிய தினத்தின்(World Heritage Day) நோக்கம் Cultural Heritage and Sustainable Tourism என்பதே ஆகும். உலகில் இருக்கும் இடங்களை பாரம்பரிய தளங்களாக ஐ.நா. மற்றும் United Nations Educational Scientific and Cultural Organisations(UNESCO) அமைப்புகளே அங்கீகரிக்கும். பாரம்பரியம் மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இத்தளங்களை இயற்கையின் படைப்பு மற்றும் மனிதர்களால் படைக்கப்பட்டவை என இரு வகைகளாகப் பிரிக்கப்படும். ஆக்ராவில் உள்ள தாஜ் மகால், நாலந்தா பழ்கலைக்கலகம், பீகாரில் உள்ள மகாபோதி ஆலயம் மற்றும் மத்திய பிரதேசத்தில் உள்ள காஜுராஹொ போன்ற 35 இடங்கள் உலக பாரம்பரிய தளங்களாக இந்தியாவில் அமைந்திருக்கின்றன. உலகம் முழுவதிலும் 1052 உலக பாரம்பரிய தளங்கள் உள்ளன.

3). எந்த மாநில அரசாங்கம் பார்மெரில் சுத்திகரிப்புக்காக திருத்தி அமைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை Hindustan Petroleum Corporation Limited(HPCL) நிறுவனத்துடன் கையெழுத்திட்டது?

A).Uttar Pradesh.

B).Madhya Pradesh.

C).Rajasthan.

D).Gujarat.

விடை : C). Rajasthan.

ராஜஸ்தான் மாநில அரசாங்கம் பார்மெரில் சுத்திகரிப்புக்காக திருத்தி அமைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை Hindustan Petroleum Corporation Limited(HPCL) நிறுவனத்துடன் ரூபாய் 43,129 கோடி மதிப்பீட்டில் அமைக்க கையெழுத்திட்டது. இந்தியாவில் BS-6 தர எரிபொருளைத் தயாரிப்பதற்காக அமைக்கப்பட்ட முதல் இடம் பார்மெராகும். இத்திட்டத்தின் 26% (சதவிகித) பங்குகளை மாநில அரசாங்கமும் மீதம் உள்ள 74% பங்குகளை Hindustan Petroleum Corporation Limited(HPCL) நிறுவனமும் பிரித்துக் கொள்ளும். இத்திட்டத்திற்காக ராஜஸ்தான் அரசாங்கம் 4800 ஏக்கர் நிலத்தை

பச்பத்ரா(PachPadra) எனும் இடத்தில் ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் முடிவு பெற 4 வருடங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4). 6 ஆவது முறையாக வழங்கப்பட்ட எம்.எஸ். சுவாமிநாதன் விருதினைப் பெற்றவர் யார்?

A). C Parthasarathy.

B).M Y Saxena.

C).M V R Prasad.

D).R R Hanchinal.

விடை : D). R R Hanchinal.

விவசாயத்தில் தனது பங்களிப்பிற்காக 6 ஆவது முறையாக வழங்கப்பட்ட எம்.எஸ். சுவாமிநாதன் விருதினை ராயப்ப ராமப்ப ஹன்சினால் பெற்றார். இவர் வெப்ப நிலங்கள் மற்றும் அதிவெப்ப நிலங்களில் பயிரிடுதல், விதை உற்பத்திக்கான தொழில்நுட்பம் போன்றவற்றில் தனது பங்களிப்பிற்க்காக இவ்விருதினைப் பெற்றார். இவர் புது டில்லியில் உள்ள Protection of Plant Varieties and Farmers Rights Authority யின் தலைவராய் இருந்தவர். ஓய்வுபெற்ற ICAR(Indian Council for Agricultural Research) ஊதியர்களின் தலைவரின் வழிகாட்டுதலின் பேரில் ஒவ்வொரு ஆண்டும் எம்.எஸ். சுவாமிநாதன் விருது வழங்கப்படும். இவ்விருதில் ரூபாய் 2 லட்சம், ஒரு பதக்கம் மற்றும் ஒரு சான்றிதல் உள்ளடங்கும்.

5). எந்த இந்திய தொழில்நுட்பக் கழகத்தில்(IIT) கட்டிடக்கலை பயிலும் மாணவர்களுக்காக "வாஸ்து சாஸ்த்ரா" வகுப்பினைத் தொடங்கவுள்ளது?

A). IIT kharagpur.

B). IIT Bombay.

C). IIT Madras.

D). IIT Indore.

விடை : A). IIT kharagpur.

இந்தியாவின் பழைமை வாய்ந்த மற்றும் மிகப் பெரிய இந்திய தொழில்நுட்பக் கழகமான (IIT) IIT காரக்பூரில், வரும் கல்வியாண்டில் கட்டடக்கலை பயிலும் மாணவர்களுக்காக "வாஸ்து சாஸ்த்ரா" எனும் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன. கட்டிடக்கலை இளங்கலை படிப்பில் வரும் அடிப்படை வடிவமைப்பு மற்றும் கட்டிடக்களையின் வரலாறு பாடத்தில் ஒரு பகுதியாக "வாஸ்து சாஸ்த்ரா" வகுப்புகள் அமையும். இதுவே முதுகலை படிப்பில் நவகிரக மண்டலம், சமூகக் கொள்கை கருத்துக்கள், புனித பலிபீடங்கள் மற்றும் சொற்பொருளியல் போன்ற பாடங்கள் வழங்கப்படும். இது இந்தியாவில் பண்டைய காலத்திலிருந்தே தொன்று தொட்டு விளங்கும் வாஸ்து சாஸ்திரத்தினை வெளிக்காட்டவே பாடத்திட்டத்தில் இந்த வகுப்புகள் இடம் பெறவுள்ளன. இதனை பாடத்தொகுப்பினை மேற்பார்வையிடும் Institute's Science and Heritage Initiative இனால் இது அறிமுகப்படுத்தப்பட்டது.

6). உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையான "Globalisation Backlash" இன் கணக்கின் படி 2018 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP) யின் வளர்ச்சி சதவிகிதம் எத்தனை சவிகிதமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது?

A). 7.3%.

B).7.2%.

C).7.5%.

D).7.4%.

விடை : B). 7.2%.

உலக வங்கியின் சமீபத்திய அறிக்கையான "Globalisation Backlash" இன் கணக்கின் படி 2018 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP) யின் வளர்ச்சி சதவிகிதம், 2016 ஆம் நிதியாண்டில் இருந்த 6.8% சவிகிதத்திலிருந்து 7.2% சதவிகிதமாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அமைப்பானது நிதி, பனவீக்கம் மற்றும் பலவற்றைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் 2019-2020 நிதியாண்டில் இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி(GDP) யின் வளர்ச்சி சதவிகிதம் 7.7% ஆக உயரும் என அறிவித்துள்ளது.

7). மணிப்பூர் அரசாங்கத்தினால் ஊழல்களைக் கண்காணிப்பதற்க்காக அறிமுகப்படுத்தப்பட்ட "DARPAN" இணையதளத்தின் விரிவாக்கம் என்ன?

A).Digital Application for Revalue by Public And Nation.

B). Digital Application for Reappraisal by Public And Nation.

C). Digital Application for Review by Public And Nation.

D). Digital Application for Reassessment by Public And Nation.

விடை : C). Digital Application for Review by Public And Nation.

மணிப்பூர் மாநிலத்தின் முதலமைச்சரான Nongthombam Biren Singh , அரசாங்கத்தில் நடைபெறும் ஊழல்களைக் கண்காணிப்பதற்க்காக Anti Corruption Cell மற்றும் அரசாங்க செயள்களைக் கண்காணிப்பதற்க்காக Digital Application for Review by Public And Nation (DARPAN) என இரு இணைய மென்பொருளினை சமீபத்தில் அறிமுகப்படுத்தித் தொடங்கி வைத்தார். மணிப்பூர் அரசாங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு செயலகளின் தற்போதைய நிலை மற்றும் பொய்யாக அளிக்கப்பட்ட தகவல்களின் உண்மை நிலையை GPS வசதியுடன் தெரிந்த கொள்வது போன்றவற்றிற்க்காகவே இது தொடங்கப்பட்டது.

8). மூன்றாவது முறையாக நடைபெறவுள்ள 2017 ஆம் ஆண்டிற்கான Global Exhibition on Service(GES-2017) இனை எந்த நாடு வழங்கவுள்ளது?

A). சீனா.

B).ஜப்பான்.

C).தென் கொரியா.

D).இந்தியா.

விடை : D). இந்தியா.

இந்தியக் குடியரசுத்தலைவர் பிரனாப் முகர்ஜீ புது டில்லியில் உள்ள ராஷ்ட்ரபதி பவனில் ஏப்ரல் 17, 2017 அன்று மூன்றாவது முறையாக நடைபெறவுள்ள 2017 ஆம் ஆண்டிற்கான Global Exhibition on Service(GES-2017) இனை தொடங்கிவைத்தார். Global Exhibition on Service(GES-2017) நிகழ்ச்சியின் மூலம், பல்வேறு துறைகளுக்கு இந்தியவிலிருந்து பொருட்களை

ஏற்றுமதி செய்வதற்க்கான சாத்தியத்தை ஊக்குவிக்கும். 4 ஆவது நாள் Greater Noida வில் உள்ள India Expo Mart இல் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் உபசரிப்பு, போக்குவரத்து, கல்வி மற்றும் நிதித்துறை சேவைகள் போன்றவற்றிற்க்கு முக்கியத்துவம் அழிக்கப்படும். இதில் 70 க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 550 கண்காட்சியாளர்கள் மற்றும் 20,000 காட்சியாளர்கள் பங்கேற்கவுள்ளனர். இக்கண்காட்ச்சியில் சுமார் 5,000 வணிகக் கூட்டங்கள்( Business Meetings) மற்றும் 30 கருத்தரங்குகள் (Seminars) நடைபெறவுள்ளன. இக்கண்காட்ச்சியினை Confederation of Indian Industry(CII) யோடு இனைந்து வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்(Ministry of Commerce and Industry ) மற்றும் Service Export Promotion Council(SEPC) நடத்தியது .

9). 2017 ஆண்டின் Formula One Bahrain Grand Prix போட்டியில் வெற்றி பெற்றவர் யார் ?

A).Sabastian Vattel.

B).Felipe Massa.

C).Lewis Hamilton.

D).Valtteri Bottas.

விடை : A). Sabastian Vattel.

Bahrain நாட்டில் நடந்த 2017 ஆண்டின் Formula One Bahrain Grand Prix சர்வதேச போட்டியில் Scuderia Ferrari நிறுவனத்தைச் சேர்ந்த Sabastian Vattel வெற்றி பெற்றார்.

10). எந்த மத்திய அரசாங்கம், பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றி பெற்ற பெண் பிரதிநிதிகளுக்காக தேசிய அளவிலான பயிற்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது?

A).Ministry of Home Affairs.

B).Ministry of Human Resource and Development.

C). Ministry of Women and Child Development.

D). Ministry of Tribal Affairs.

விடை : C). Ministry of Women and Child Development.

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் ஏப்ரல் 17,2017 அன்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமும் இனைந்து பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றி பெற்ற பெண் பிரதிநிதிகளுக்காக தேசிய அளவிலான திறன் மேம்பாட்டு பயிற்சிகளையும் மற்றும் பஞ்சாயத்துத் தேர்தலில் வெற்றி பெற்ற பெண் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிப்பவர்களுக்கான பயிற்சி வகுப்புகளையும் தொடங்கியது. இப்பயிற்சி பெண்களின் ஆட்சித்திறனை மேம்படுத்துவதற்க்காக மற்றும் பஞ்சாயத்து அமைப்பின் தினசரி செயல்களைச் செய்வதர்க்கான மன உறுதியை வளர்த்துக்கொள்வதற்க்கும் மற்றும் இந்திய அரசியலமைப்பில் இருக்கும் பெண்களுக்கான உரிமைகள் மற்றும் விதிகளைத் தெரிந்து கொள்வதற்க்கும் தொடங்கப்பட்டுள்ளது.